**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் ஆவணி 04–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 ஆகஸ்ட் 26– ஆம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் : 0650 /2020/இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டிருக்கும் எரிவாயு தகனமேடையில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளதால் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.9,00,000/–க்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1646 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண் : 0639 /2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு செம்மாங்காளிபாளையம் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் தண்ணீர்அளவு மிகவும் குறைந்துள்ளது. இதனால் இந்த சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் போதுமான அளவு தண்ணீர் கிடைக்காமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இப்பகுதியில் ஏற்கனவே ஒரு ஆழ்குழாய் கிணறு Hand pump பொருத்தப்பட்டு உள்ளது. இதில் போதுமான தண்ணீர் உள்ளதால் இதில் மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்யலாம்.

மேலும், 1வது வார்டு AC நகர் ஆதி திராவிடர் காலணி பகுதிக்கு புதிய குடிநீர் இணைப்பு கோரி வருகின்றனர். இப்பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்படவில்லை. எனவே, இப்பகுதியில் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. . மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1647 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண் : 0618/2020/இ1**

நகராட்சி பகுதிகளில் உபயோகமற்ற மற்றும் மக்கள் பயன்பாட்டில் இல்லாத ஆழ்குழாய் கிணறுகளை மூடும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் Roc No. 26240/2019/ws1 தேதி 07.08.2020–ல் தெரிவித்துள்ளார். அதன்படி காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சின்னாய்புதூர் பகுதியில் கைப்பம்பு பொருத்தப்பட்ட ஆழ்குழாய் கிணறு ஒன்று மக்கள் பயன்பாட்டில் இல்லாததால் அதனை சுற்றி குழந்தைகள் விழாத வகையில் கான்கரீட் மேடை அமைத்து மூடி போட்டு மூடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1648 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண் : 0667/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சிவன் நகர் முதல் தொட்டியபட்டி சாலையில் TURIP திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் சில கூடுதல் பணிகள் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதால் சாலை இணைப்பு பணிகள் முழுமையடையாத நிலையுள்ளது. எனவே, இந்தப் பணியை முழுமையடைய சிவன் நகரிலிருந்து தொட்டியபட்டி சாலை இணையும் இடத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணி அவசியமானதாக உள்ளது. மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1649 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 0329 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி உரக்கிடங்கில் ஒரு தரைமட்ட நீர் தேக்க தொட்டி அமைத்தல் பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சுப்பையா — மதிப்பீட்டை விட +4.95 % அதிகம்
2. வடிவேல் — மதிப்பீட்டை விட +5.70 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1650 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 0892 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 9 வரை சிறுமின்விசைப்பம்பு திட்டம் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் — மதிப்பீட்டை விட -0.10 % குறைவு
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் — மதிப்பீட்டை விட +0.25 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **–0.10%** குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1651 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 0893 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.10 முதல் 18 வரை சிறுமின்விசைப்பம்பு திட்டம் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் — மதிப்பீட்டை விட -0.08 % குறைவு
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் — மதிப்பீட்டை விட +0.15 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **–0.08%** குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1652 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 0792 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட மூர்த்தி ரெட்டி பாளையம் பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சுப்பையா மதிப்பீட்டை விட +4.90 % அதிகம்

2. வடிவேல் மதிப்பீட்டை விட +6.10 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1653 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் : 0344 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் 200mm sluice and non return valve பொருத்துதல் பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +4.95 % அதிகம்

2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +5.80 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1654 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண் : 0571 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி பொதிகை நகர் கிழங்கு பகுதிகளில் வடிகால் அமைத்தல் பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சுப்பையா மதிப்பீட்டை விட +4.97 % அதிகம்

2. வடிவேல் மதிப்பீட்டை விட +5.30 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1655 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்பு எண் : 0778 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட காந்திநகர் பகுதியில் உள்ள கழிவுநீர் வடிகால் குழாய் பாலத்தை காண்கிரிட் பாலமாக மாற்றி அமைக்கும் பணிக்காக 14.08.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சுப்பையா மதிப்பீட்டை விட +4.90 % அதிகம்

2. வடிவேல் மதிப்பீட்டை விட +6.46 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1656 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**ந.க.எண்.741/2018/அ2**

2020–2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2016–2017 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகையினை திரும்பி தருமாறு விண்ணப்பித்துள்ளனர்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | கடை வாடகை தொழில் வரி மற்றும் அபராத தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிவசுப்பிரமணி | ஐடிஎஸ்எம்டி கடை எண் 11 | **2015–16** | **38** | **56** | **200000** | **2100** | **197900** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | ஆர்.சீனிவாசன் | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண்.2 | 2015–16 | 39 | 71 | 75000 | 0 | 75000 |
| 3 | பி.கலைச்செல்வி | ஐடிஎஸ்எம்டி கடை எண் 7 | 2016–17 | 42 | 32 | 100000 | 0 | 100000 |
| 4 | எஸ்.ஆர்.தங்கவேல் | பழைய பேருந்து கடை எண் 3 | 2013–14 | 26 | 47 | 153600 | 0 | 153600 |
| | | | 2013–14 | 26 | 48 | 10000 | 0 | 10000 |
| | | | 2016–17 | 42 | 42 | 72960 | 0 | 72960 |
| 5 | கே.திருப்பதிசாமி | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண்.14 | 2016–17 | 48 | 122 | 73880 | 0 | 73880 |
| 6 | கே.திருப்பதிசாமி | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண்.15 | 2016–17 | 48 | 130 | 73880 | 22268 | 51612 |
| 7 | இ.கலீம் | பழைய பேருந்து கடை எண் 18 | 2013–14 | 25 | 27 | 6241 | 0 | 6241 |
| | | | 2013–14 | 25 | 28 | 23534 | 0 | 23534 |
| | | | 2013–14 | 27 | 57 | 10000 | 0 | 10000 |
| 8 | எஸ்.பொன்னுசாமி | நகரப் பேருந்து நிலைய கடை எண் 3 | 2006–07<br>2007–08<br>2007–08<br>2011–12<br>2016–17 | 6<br>8<br>9<br>16<br>48 | 18<br>31<br>32<br>32<br>129 | 8800<br>5000<br>30360<br>4560<br>51236 | 0<br>0<br>0<br>0<br>0 | 8800<br>5000<br>30360<br>4560<br>51236 |
| 9 | எஸ்.பொன்னுசாமி | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண்.13 | 2006–07<br>2009–10 | 5<br>13 | 7<br>3 | 50000<br>19665 | 0<br>0 | 50000<br>19665 |
| 10 | எஸ்.பொன்னுசாமி | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண்.14 | 2007–08 | 9 | 37 | 15000 | 0 | 15000 |

மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய கடை வாடகை , தொழில் வரி மற்றும் அபராதத் தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகையினை பொது நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1657 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

**கோப்பு எண்.00972/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்டவார்டு எண்கள்.1,2,3,4,5 மற்றும் 6 ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் சாக்கடை கழிவுநீரானது சென்னிமலைரோடு மின்மயானப்பகுதிக்கு எதிரில் உள்ள கழிவுநீரின் கால்வாய் மூலம் ஒரு பகுதியும், மற்றும் பழையகோட்டைரோடு சரவணா மெடிக்கல் சென்டர் மருத்துவமனை எதிர்புறம் உள்ள கால்வாய்பகுதியிலும் மற்றும் பாரத் நகரில் இருந்து கரூர்ரோடு வரையிலும் செல்கிறது. இவ்வாறு மேற்கண்ட வார்டுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பாரத் நகர் மெயின் கால்வாயில் கலந்து செல்லும் அதில் வளர்ந்துள்ள புல்செடிகள் மற்றும் மண் அடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகள் மற்றும் அருகில் உள்ள விளைநிலங்களுக்குள் செல்கிறது. இதனைதடுக்கும் பொருட்டு ஓடையில் மண்ணை எடுத்து தரவும், அருகில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட பகுதியில் தனியார் கிட்டாச்சி இயந்திரத்தினை பயன்படுத்தி கழிவு நீர் கால்வாயினை தூர் எடுத்துசுத்தம் செய்ய நகராட்சி சட்டம் விதி எண் 15–ன் கீழ் மேற்படி பணியினை முடிக்க மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது. உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண் 15–ன் கீழ் பணி உத்திரவு வழங்கவும் அதற்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1658 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:14**

**கோப்பு எண்: 0945/2020/இ1**

காங்கயம் நகராட்சி பேருந்து நிலையத்தின் அங்கீகாரத்தை 8.8.2020 முதல் ஓராண்டிற்கு புதுப்பிக்கும் பொருட்டு அனுமதி கோருவதற்கு தேவையான வசதிகள் செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1659 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:15**

**கோப்பு எண் : 0873/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் சமயலறையில் தரைதளம் உடைந்து பழுதடைந்துள்ளது. படிக்கட்டுகள் பழுதடைந்துள்ளது. பொதுமக்கள் வந்து செல்லும் இடமாக உள்ளதால் பணியின் அவசியம் கருதி இந்த பணிகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பங்களாபுதூர் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள குழாய் பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் கழிவுநீர் வெளியேற இயலாமல் தேங்கியுள்ளது. இதனால், சுகாதார கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே இதனை சீரமைத்து குழாய் பாலம் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1660 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:16**

**கோப்பு எண்: 0938/2020/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் UPS பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள 10 பேட்டரிகள் பழுதடைந்துள்ளது. இதனால் அலுவலகப் பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே, இதற்கு புதியதாக 10 பேட்டரிகள் வாங்கி பொருத்த வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1,35,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1661 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:17**

**கோப்பு எண்: 0708/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு பகுதியிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கடைகளில் கடை எண் 1 மற்றும் கடை எண்.8 ஆகியவற்றின் மேற்கூரை பழுதடைந்துள்ளது. இதனால், மழைக்காலங்களில் கூரையில் Leakage ஏற்படுகிறது. எனவே, இந்த பழுதுகளை உடனடியாக சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தாராபுரம் ரோடு பகுதியில் காவல் ஆய்வாளர் குடியிருப்பு முதல் ரவுண்டானா வரை வடிகால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மற்றும் கோவை ரோடு இரண்டாவது தெருவில் வடிகால் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால், கழிவு நீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே, இந்த வடிகாலை சீரமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ.7,00,000/–க்கு (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1662 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:18**

**ந.க.எண்.741/2018/அ2**

2020–2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2016–2017 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகையினை திரும்பி தருமாறு விண்ணப்பித்துள்ளனர்.

| வரிசை எண் | குத்தகைதாரார் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | கடை வாடகை தொழில் வரி மற்றும் அபராத தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச.கவாஸ்கர் | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண்.3 | 2016–17 | 48 | 131 | 59844 | 28632 | 31212 |
| 2 | முருகானந்தம் | இளநீர் விற்பனை | 2016–17 | 44 | 74 | 99873 | 624 | 99249 |

மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய கடை வாடகை மற்றும் தொழில் வரி தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகையினை பொது நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1663 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:19**

**ந.க.எண். <u>840 /2017/சி1</u>**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/அ2, நாள்.18.08.2020ஆம் தேதிய கடிதத்தில், காங்கயம் நகராட்சியின் 2020–

2021 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்திர பங்கு தொகை ரூ.20,000/—ஐ கோயமுத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்துமாறு தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களுக்கு தொகை ரூ.20,000/— செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப்பிரிவு 1920—ன் படியும், அவசர அவசியம் கருதியும் நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.20,000/—ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களுக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1664 . நாள்.26.08.2020.**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

**கோப்பு எண் : 0398 /2020 /இ1**

காங்கயம் நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020-21-.ன் கீழ் ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3 ராஜீவ் நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.6 அய்யாச்சாமி நகர் காலணி குறுக்கு வீதிகள், வார்டு எண்.10 பங்களாபுதுார் ரோடு, வார்டு எண்.13,17,18 அகஸ்திலிங்கம்பாளையம் முதல் திருப்பூர் ரோடு பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் பணிக்கு 19.08.2020—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் |
| 2) | M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 24.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் | 4.98% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன் | 6.51% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண். 00398/ 2020 / இ1, நாள். 25.08.2020—.ன் மூலம் கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை குறைக்க இயலாது என

தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி, 4.98% கூடுதல் விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் அவர்களின் **4.98%** மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
2. கூடுதல் சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதால் ஏற்படும் மதிப்பீட்டைவிட கூடுதல் செலவின தொகையான ரூ.3,08,208/– நகராட்சியின் பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1665 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:21**

**கோப்பு எண் : 0398 /2020 /இ1**

காங்கயம் நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020-21-.ன் கீழ் ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3 சென்னிமலை ரோடு குறுக்கு வீதி, வார்டு எண்.7 பெரியார் நகர் மெயின் வீதிகள், வார்டு எண்.9 அழகேகவுண்டன்புதூர் ரோடு , வார்டு எண்.10 செம்மாங்காளி பாளையம் ரோடு பகுதிகளில் தார்சாலை அமைத்தல் பணிக்கு 19.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | M/s. சபரி கன்ஸ்ட்ரகஷன் |
| 2) | M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 24.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s. சபரி கன்ஸ்ட்ரகஷன் | 4.98% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா (பி) லிமிடெட் | 8.09% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s. . சபரி கன்ஸ்ட்ரகஷன் அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s. . சபரி கன்ஸ்ட்ரகஷன்அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண். 0398/ 2020 / இ1, நாள். 25.08.2020–.ன் மூலம் கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி, 4.98% கூடுதல் விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுடுகறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s. . சபரி கன்ஸ்ட்ரகஷன் அவர்களின் **4.98%** மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. கூடுதல் சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதால் ஏற்படும் மதிப்பீட்டைவிட கூடுதல் செலவின தொகையான ரூ.24,462/– நகராட்சியின் பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1666 . நாள்.26.08.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி